சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 26/2022

பெயர். திருமதி. உமா நாள் 24.06.2026
க/பெ. பரசுராமன்

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) விபத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் புகார் ஏதும் அளிக்கவில்லை. **ம.த.சா.ஆ.16** 2020 உடன் முடிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 2020 க்கு பிறகு என் கணவர் சுமை தூக்கும் தொழிலாளியாக பணியாற்றினார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **ம.த.சா.ஆ.16 ல்** விபத்து இறப்புக் காப்பீடு ரூ.1,00,000 நான் பெறவில்லை. **ம.த.சா.ஆ.15** முறையான ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் வயதை குறைத்து காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தாலேயோ அல்லது ஓட்டுநராலோ விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

2) என் கணவர் சுப்ரமணி இறப்பு நிகழ்ச்சிக்காக அங்கு சென்றார். அந்த இறப்பு நிகழ்ச்சியில் வெடி வெடித்த போது புகை மண்டலமாகி அதில் என் கணவர் தள்ளுமுள்ளுவில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனவே, 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் தரத்தேவையில்லை என்றால் சரியல்ல. சவ ஊர்வலத்தை எடுத்து சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை

தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக முதல் தகவலறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை